**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
*Ang Mo Kio Tamil Methodist Church*

**10th மார்ச் / 10th March 2024 ஞா யிறு ஆராதனை**
*Trinity Theological Sunday*

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. ஷீபா ஜான்சன்**<br>Mrs. Sheeba Johnson |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. ஷீபா ஜான்சன்**<br>Mrs. Sheeba Johnson |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**என் மேய்ப்பர் இயேசு கிறிஸ்துதான்**

*1. என் மேய்ப்பர் இயேசு கிறிஸ்துதான்,*
*நான் தாழ்ச்சியடையேனே*
*ஆட்கொண்டோர் சொந்தமான நான்*
*குறையடைகிலேனே.*

*2. ஜீவாற்றில் ஓடும் தண்ணீரால்*
*என் ஆத்ம தாகம் தீர்ப்பார்;*
*மெய் மன்னாவாம் தம் வார்த்தையால்*
*என் மேய்ச்சல் எனக்கீவார்.*

*3. நான் பாதை விட்டு ஓடுங்கால்*
*அன்பாகத் தேடிப் பார்ப்பார்*
*தோள்மீதில் ஏற்றிக் காப்பதால்*
*மகா சந்தோஷங்கொள்வார்.*

*4. சா நிழல் பள்ளத்தாக்கிலே*
*நான் போக நேரிட்டாலும்,*
*உம் அன்பின் கோலைப் பற்றவே*
*அதே என் வழி காட்டும்.*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் *10*ம் ஞாயிறு தேவ ஆராதனை புத்தகம் *28***<br>*"சங்கீதம் 27"* | **சபையார் இணைந்து**<br>Congregation |

"கர்த்தர் என் வெளிச்சமாயிருக்கிறார்?"

Psalter Reading –Page 28 "Psalm 27"

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

தேவ பிதா என்றன் மேய்ப்பர் அல்லோ

தேவ பிதா என்றன் மேய்ப்பர் அல்லோ,
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே.

ஆவலதாய் எனைப் பைம்புன்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார்

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி,
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்,
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்,
வளை தடியும் கோலுமே தேற்றும்

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்,
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார்

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன்

| | |
|---|---|
| ✝ **பூலோகத்தாரே யாவரும்**<br>Doxology | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **திருமறைப் பாடம்**<br>***யோவான் 10 : 11 – 18*** | **திருமதி. எஸ்தர் நவீன்**<br>Mrs. Esther Naveen |

Scripture Reading :
John 10:11-18

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

<u>நல் மேய்ப்பன் இவரே</u>

நல் மேய்ப்பன் இவரே - இயேசு
நல் மேய்ப்பன் இவரே
சொல்லொண்ணா அன்பினால்
தன்னுயிர் ஈந்த நல் மேய்ப்பன் இவரே

1. ஆடுகள் பெயரினை ஆயனே அறிவார்
அழியாமை ஜீவன் அளித்திட வந்தார்
ஆடுகள் முன்னே செல்லுகின்றார்
அவரின் பின்னே சென்றிடுவோம்

2. கள்வர் மந்தையை சாடிடும்போதும்
கயவரின் வஞ்சக வலை வீசும்போதும்
பிள்ளையைப் போல தோள்களிலே
கள்ளமில்லா துயில் கொண்டிடுமே

3. மேய்ப்பனின் குரலை அறிந்திடும் மந்தை
மேய்ப்பனின் சித்தம் செய்திடும் ஆடுகள்
குரலொலி கேட்டு தேடிடுமே
குயவனின் கையில் அடங்கிடுமே

4. இயேசுவே வாசல் இயேசுவே வழியாம்
அவர் வழிசென்றால் மேய்ச்சலைக் காண்பாய்
ஆண்டவர் இணைத்த மந்தையிலே
அநுதினம் நீயும் செயல்படுவாய்

5. பெரிய மேய்ப்பர் வெளிப்படும்போது
வெகுமதி யாவும் அளித்திடுவாரே
நீதியும் பரிசுத்தம் காத்திடுவோம்
புனிதரின் இராஜ்ஜியம் சேர்ந்திடுவோம்

***அறிவிப்புகள்***
Announcements

✝ மனப்பாட வசனங்கள் — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***யோவான் 10 : 14 – 15***
John 10:14-15

***14. நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்,***

***15. நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** / **Indicates Congregation standing**